## ஒப்பந்தப்புள்ளி விபரம்

1. ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர் பெயர் - பதவி, முகவரி - திரு. எஸ்.ஜோசப் டயஸ். மேலாண் இயக்குநர், தநாஅபோக (விழு) லிட், விழுப்புரம்.

2. பணிகள் சம்பந்தமாக விபரம் - கழிவு செய்யப்பட்ட பொருட்கள் & வாகனங்கள் ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏலம் மூலமாக விற்பனை செய்வது சம்பந்தமாக. மொத்த மதிப்பீடு சுமார் 80 இலட்சம்.

3. பணி அல்லது கொள்முதல் நடைபெறும் - மாவட்டங்களின் பெயர் - விழுப்புரம், வேலூர் மற்றும் காஞ்சிபுரம்.

4. எந்த இடத்தில் ஒப்பந்தப்புள்ளி சம்பந்தமாக படிவம் கிடைக்கும் விபரம் - துணை மேலாளர் (கணக்கு), தநாஅபோக (விழு) லிட், விழுப்புரம், வேலூர், காஞ்சிபுரம்.

5. கழிவு செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் வாகனங்கள்

   இடம் மற்றும் தேதிகள்

| மண்டலங்கள் | மண்டல அலுவலகங்களில் பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளி விண்ணப்பங்கள் ஒப்படைப்புசெய்து கொள்ள கடைசி நாள் | பொது ஏலம் நடைபெறும் நாள் மற்றும் ஒப்பந்தப்புள்ளி விண்ணப்பங்கள் திறக்கப்படும் நாள் |
|---|---|---|
| விழுப்புரம் (கூண்டு கட்டும் பிரிவு - பண்ருட்டி) | 18.07.2022 | 19.07.2022 |
| | 12.08.2022 | 16.08.2022 |
| | 19.09.2022 | 20.09.2022 |
| வேலூர் (இரங்காபுரம் - வேலூர்-9) | 20.07.2022 | 21.07.2022 |
| | 17.08.2022 | 18.08.2022 |
| | 21.09.2022 | 22.09.2022 |
| காஞ்சிபுரம் (ஓரிக்கை பணிமனை-காஞ்சிபுரம்) | 22.07.2022 | 23.07.2022 |
| | 19.08.2022 | 20.08.2022 |
| | 23.09.2022 | 24.09.2022 |

...2

| | | |
|---|---|---|
| 6. ஒப்பந்தப்புள்ளி அலுவலர் பொருத்தமானது என தீர்மானிக்கும் முக்கியமான தகவல் | - | (அ) ஒப்பந்தப்புள்ளியில் கோரப்படும் பொருட்களுக்கு பிணை வைப்புத்தொகை கேட்பு வரைவோலையாக மேலாண் இயக்குநர், தநாஅபோக (விழு) லிட், விழுப்புரம் என்ற பெயருக்கு பெறப்பட்டு விழுப்புரத்தில் மாற்றத்தக்க வகையில் இணைக்கப்பட வேண்டும்.<br><br>(ஆ) முடிவு தேதி மற்றும் நேரத்திற்கு பின்னர் பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பிணை வைப்புத்தொகை இல்லாத ஒப்பந்தப்புள்ளிகள் நிராகரிக்கப்படும்.<br><br>(இ) எவ்வித காரணமுமின்றி எந்த ஒரு ஒப்பந்தப்புள்ளியையும் அல்லது அனைத்து ஒப்பந்தப்புள்ளிகளையும் நிராகரிக்க மேலாண் இயக்குநருக்கு முழு உரிமை உண்டு. |

மேலாண் இயக்குநர்

## தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடெட்
## விழுப்புரம் - 605 602.
## (தமிழ்நாடு அரசு நிறுவனம்)
## 3/137, சாலாமேடு, தபால் பெட்டி எண்.56, விழுப்புரம்

### கழிவு செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் கழிவு செய்யப்பட்ட வாகனங்கள் ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏலம் (TENDER CUM PUBLIC AUCTION) அறிவிப்பு

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம் (விழுப்புரம்) லிமிடெட், விழுப்புரம் கழகத்தில் விழுப்புரம் மண்டலத்தில் பண்ருட்டி-கூண்டு கட்டும் பிரிவிலும், வேலூர் மண்டலத்தில் மண்டல அலுவலகம், இரங்காபுரத்திலும் மற்றும் காஞ்சிபுரம் மண்டலத்தில் ஓரிக்கை பணிமனையிலும் கழிவு செய்யப்பட்ட பேருந்துகள், இதர வாகனங்கள், வாகன பொருட்கள், கழிவு செய்யப்பட்ட காலி பேரல்கள், டயர்கள், ட்யூப்கள், பிளாப்புகள், டயர் தூள்கள், கழிவு செய்யப்பட்ட உதிரி பாகங்கள், வேஸ்ட் பேப்பர்கள், எண்ணெய் கழிவுகள் மற்றும் இதர கழிவுப்பொருட்கள் போன்றவைகளை ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏலம் மூலம் அப்புறப்படுத்துவதற்கான ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏலம் நடைபெறும் தேதிகள் விபரம் பின்வருமாறு.

| கூண்டு கட்டும் பிரிவு - பண்ருட்டி, இரங்காபுரம் (மண்டல அலுவலகம்) - வேலூர், ஓரிக்கை பணிமனை - காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் பொது ஏலம் நடைபெறும் நாள் | | |
|---|---|---|
| விழுப்புரம் | வேலூர் | காஞ்சிபுரம் |
| 19/07/2022 | 21/07/2022 | 23/07/2022 |
| 16/08/2022 | 18/08/2022 | 20/08/2022 |
| 20/09/2022 | 22/09/2022 | 24/09/2022 |

ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏலம் பற்றிய விதிகள் மற்றும் நிபந்தனைகளுடன் கூடிய கழிவு செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் கழிவு செய்யப்பட்ட வாகனங்கள் பற்றிய விபரமான பட்டியலை துணை மேலாளர்(கணக்கு), தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிட், விழுப்புரம்-விழுப்புரம்/வேலூர்/காஞ்சிபுரம் அவர்களிடமிருந்து ஏலத் தேதிக்கு முன் ஐந்து வேலை நாட்களில் நேரில் ரூ.60/- (சரக்கு மற்றும் சேவை வரிகள் உட்பட) பணமாகவோ அல்லது TNSTC (VPM) LTD, VILLUPURAM என்ற பெயரில் வங்கி வரைவோலையோ செலுத்தி ஒப்பந்தப்புள்ளி படிவம் பெற்றுக்கொண்டு ஏலப் பொருட்களை பார்வையிடலாம்.

...2

அஞ்சல் வழியாக ஒப்பந்தப்புள்ளி படிவம் பெற விருப்பமுள்ளவர்கள் தெளிவான முகவரியுடன் (கழிவு செய்யப்பட்ட பொருட்களுக்குரிய படிவம் என்பதைக் குறிப்பிட்டு) அஞ்சல் கட்டணமாக ரூ.50/-ஐ கூடுதலாக செலுத்தி வங்கி வரைவோலையாக அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. எந்தவொரு அஞ்சல் தாமதத்திற்கும் போக்குவரத்துக் கழகம் பொறுப்பேற்காது. ஒப்பந்தப்புள்ளி விண்ணப்பங்கள் வாங்கியவர்கள் மட்டும் ஒரு விண்ணப்பத்திற்கு இரண்டு நபர்கள் என்ற அளவில் (விடுமுறை நாட்கள் தவிர) ஒரு முறை மட்டும் ஏலப் பொருட்களை பார்வையிட அனுமதிக்கப்படுவார்கள்.

தேவையான பிணை வைப்புத்தொகையுடன் கூடிய மூடப்பட்ட பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் உதவி மேலாளர் (பண்டகம்), தநாஅபோக (விழு) லிட், விழுப்புரம் - விழுப்புரம்/வேலூர்/காஞ்சிபுரம் அவர்களால் பொது ஏலத் தேதிக்கு முந்தைய வேலை நாளில் மாலை 05.00 மணி வரை பெறப்படும்.

மேலே கூறப்பட்டுள்ள பொது ஏலத் தேதிகளில் அன்று காலை 11.00 மணியளவில் விழுப்புரம் மண்டலம் - பண்ருட்டி-கூண்டு கட்டும் பிரிவிலும், வேலூர் மண்டலம் - வேலூர், மண்டல அலுவலகம், இரங்காபுரத்திலும் மற்றும் காஞ்சிபுரம் மண்டலம் - காஞ்சிபுரம், ஓரிக்கை பணிமனையிலும் பொது ஏலம் நடைபெறும். ஒப்பந்தப்புள்ளியிலோ அல்லது பொது ஏலத்திலோ பெறப்பட்ட உயர்ந்தபட்ச விலைப்புள்ளி ஏற்கத்தக்கதாகக் கருதப்படும். எந்த விலைப்புள்ளியையும், எந்த நேரத்திலும், எவ்வித காரணமுமின்றி தள்ளுபடி செய்வதற்கு மேலாண் இயக்குநருக்கு முழு உரிமை உண்டு.

மேலாண் இயக்குநர்

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடட், விழுப்புரம்-605 602.
ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலத்திற்கான விதிமுறைகளும் வரையறைகளும்

1. ஒப்பந்தப்புள்ளி படிவங்களை பெற ரூ.60/-ஐ (GST - சரக்கு மற்றும் சேவை வரி உட்பட) நேரில் விழுப்புரம், வேலூர், காஞ்சிபுரம் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை திரும்ப அளிக்கப்படமாட்டாது.

2. ஒவ்வொரு ஒப்பந்தப்புள்ளி படிவமும் பிணை வைப்புத்தொகையாக பேருந்து ஒன்றுக்கு ரூ.10,000/- வீதமும் மற்றும் இலகு ரக வாகனம் ஒன்றுக்கு ரூ.5000/- வீதமும் இருசக்கர வாகனம் ஒன்றிற்கு ரூ.2,000/- வீதமும் மற்ற பொருட்களுக்கு அப்பொருட்களின் விற்பனை மதிப்பில் 10% தொகையும் செலுத்த வேண்டும். பொருட்களின் மொத்த விலை மதிப்பு ரூ.1000/- மும் அதற்கு குறைவாகவும் இருப்பின் அப்பொருட்களின் முழு விற்பனை மதிப்பு தொகையை பிணை வைப்புத்தொகையாக செலுத்த வேண்டும். பிணை வைப்புத்தொகை "தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம் (விழுப்புரம்) லிமிடெட், விழுப்புரம்" என்ற பெயருக்கு பெறப்பட்ட வங்கி வரைவோலையாக (Demand Draft) மட்டுமே இணைக்கப்பட வேண்டும். பிணை வைப்புத்தொகை குறைவாகவோ (அ) இல்லாமலோ பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் நிராகரிக்கப்படும்.

3. அட்டவணையில் அல்லது ஏலத்தில் குறிப்பாக ஏதேனும் கூறப்படாவிடில் கழிவு செய்யப்பட்ட இரும்பு பொருட்கள் மற்றும் கழிவு பொறி எண்ணெய் ஆகியவைகள் தொகுப்பு முறையில் அவைகள் இருக்கும் நிலையிலேயே ஏலம் விடப்படும். ஏலம் விடப்படும் பொருட்களுக்கு உத்திரவாதமோ அல்லது சான்று வலிமையோ கொடுக்கப்படமாட்டாது.

4. ஒப்பந்தப்புள்ளி (படிவத்தில்) அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏலத்தேதிக்கு முன் வேலை தினம் மாலை 5.00 மணிக்குள் பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் உதவி மேலாளர் (பண்டகம்), தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம் (விழுப்புரம்) லிமிடெட், விழுப்புரம் / வேலூர் /காஞ்சிபுரம் அவர்களிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

5. ஏலம் / ஒப்பந்தப்புள்ளி (படிவத்தில்) அட்டவணையில் குறிப்பிட்ட தேதியில் நடத்தப்படும். ஏலம் முடிந்த பிறகு ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் ஏலத்தில் கலந்து கொண்ட ஏலதாரர்கள் / ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

6. ஏலத்தில் கலந்துகொள்ளும் ஏலதாரர்களிடம் முன்பணமாக ரூபாய் 1000/- வசூலிக்கப்படும். ஏலம் முடிந்தபின்னர் இத்தொகை திருப்பியளிக்கப்படும்.

7. கொரோனா வைரஸ் நோய்த்தொற்றுப் பரவல் காரணமாக ஒப்பந்ததாரர்கள் / ஏலதாரர்கள் ஒருவர் மட்டுமே ஏலத்தில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படும். நுழைவுக்கட்டணமாக ரூபாய் 100/- மட்டும் வசூலிக்கப்படும்.

8. ஏலம் கேட்பவர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் பொருட்களை பார்வையிடுவதற்கு அனுமதி சீட்டு பெற்று அலுவலக நேரத்தில் பார்வையிடலாம். பொருட்களை பார்வையிட்ட பின்னரோ அல்லது பொருட்களை எடுத்துச்செல்லும் போதோ அப்பொருட்கள் குறித்து எவ்விதமான புகார்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

9. தொகுப்புகள் / பொருட்கள் ஒன்றன்பின் ஒன்றாக ஏலத்தில் விடப்படும். ஏலக்குழு அல்லது மேலாண் இயக்குநரின் ஒப்புதலின் பேரில் அதிகமான விலை கேட்பவருக்கு அவர்கள் கேட்ட விலை சரியானதாக இருந்தால் மட்டுமே ஒப்புதல் அளிக்கப்படும். ஒருவேளை ஏலம் குறித்து சச்சரவு ஏற்பட்டால் உச்சதொகைக்கு அடுத்த குறைந்த தொகையில் இருந்து மறு ஏலம் விடப்படும்.

10. ஏலத்தில் அதிக விலை கோரியவர், அப்பொருளின் மதிப்பு ரூ. 1000/- மும் மற்றும் அதற்குக் குறைவாக இருப்பின் அப்பொருளின் முழுத்தொகையினை பிணைவைப்புத்தொகையாகவும், அப்பொருளின் மதிப்பு ரூ. 1000/- க்குமேல் இருப்பின் அப்பொருளின் மதிப்பில் 25% அல்லது ரூ. 1000/- இதில் எது அதிகமோ அத்தொகையினை பிணைவைப்புத்தொகையாக பணமாகவோ அல்லது வங்கி வரைவோலையாகவோ (DD) உடன் செலுத்த வேண்டும். இல்லையேல் அந்த நபரின் மேற்குறிப்பிட்ட தொகை ரூ. 1000/- திருப்பி அளிக்கப்படமாட்டாது.

11. சரக்கு மற்றும் சேவை வரி (GST) மற்றும் இதர தீர்வைகள் பொருட்கள் ஒப்படைக்கும் நேரத்தில் உள்ள சட்டப்படி வசூல் செய்யப்படும்.

12. ஏலம் முடிந்தபின் ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் திறக்கப்பட்டு ஏலத்தில் விலை கோரியவர் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் விலை குறிப்பிட்டவர் இந்த இருவரில் எவர் அதிக விலை கோரியுள்ளாரோ அவருக்கு பொருட்கள் / தொகுப்புகள் வழங்கப்படும். பணத்தை முழுமையாக செலுத்திய பின்னரே ஒப்படைப்பு ஆணை வழங்கப்படும்.

...2

13. ஒப்பந்தப்புள்ளி படிவத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பொருட்களின் எடை தோராயமானது. அதிக விலை கோரிய ஒப்பந்ததாரர் / ஏலதாரர் பொருட்களை அவைகள் உள்ள நிலையிலேயே முழுமையாக எடுத்துச்செல்ல வேண்டும், குறிப்பிட்ட காலத்திற்குள் பொருட்களை எடுத்துச்செல்லாதவர்களின் பிணை வைப்புத்தொகை திருப்பி அளிக்கப்படமாட்டாது.

14. ஏலத்தில் குறைவாக மதிப்பிட்டவர்க்கு அவர்கள் பணமாக செலுத்திய பிணைவைப்புத்தொகையினை ஏலம் முடிந்த பின்னர் கோடிட்ட காசோலையாகவும் (Cheque), பிணைவைப்புத்தொகையினை (Demand Draft) வரைவோலையாக செலுத்தியவர்கட்கு வரைவோலை வங்கியில் பணமாக்கப்பட்ட பின்னர் கோடிட்ட காசோலையாகவும் வழங்கப்படும்.

15. பிணை வைப்புத்தொகைக்கு வட்டி ஏதும் வழங்கப்படமாட்டாது.

16. வெற்றியார்ந்த ஒப்பந்ததாரர்கள் / ஏலதாரர்கள் ஏலம் எடுத்த பொருட்களுக்கு விற்பனை உறுதியாக்க ஆணை அனுப்பப்பட்ட தேதியிலிருந்து 10 நாட்களுக்குள் அலுவலக நாட்களில் (12 மணிக்கு முன்னர்) பொருட்களின் நிலுவைத்தொகையுடன் சரக்கு மற்றும் சேவை வரி மற்றும் தீர்வைகளை பணமாகவோ அல்லது வரைவோலையாகவோ முழுமையாக செலுத்தி பொருட்களை எடுத்துச்செல்ல வேண்டும்.

17. வெற்றியார்ந்த ஒப்பந்ததாரர்கள் / ஏலதாரர்கள் அவர்கள் பணம் செலுத்திய 5 நாட்களுக்குள் பொருட்களை அவரின் சொந்த செலவில் / ஏற்பாட்டில் எடுத்து சென்று விட வேண்டும்.

18. ஒப்பந்ததாரர்கள் / ஏலதாரர்கள் அலுவலக நேரத்தில் மட்டுமே பொருட்களை எடுத்துச்செல்ல அனுமதிக்கப்படுவார்கள். அதாவது காலை 9.00 மணி முதல் 12.00 மணி வரையிலும், மதியம் 1.00 மணி முதல் 4.00 மணி வரையிலும் பொருட்களை எடுத்துச்செல்ல அனுமதிக்கப்படுவார்கள். எக்காரணம் கொண்டும் மேற்குறிப்பிட்ட நேரத்திற்கு பின்னர் பொருட்களை எடுத்துச்செல்ல அனுமதிக்கப்படமாட்டாது.

19. ஒவ்வொரு தொகுப்புகளும் தனித்தனியே நிறையிடப்படும்.

20. ஒரு தொகுப்புக்கும் மேலாக பொருட்கள் எடுத்துச்செல்ல வேண்டியவர்கள் ஒப்படைப்பு அதிகாரியிடம் அன்றாட வேலைகளுக்கு இடைஞ்சல் இன்றி தங்களுக்கு வேண்டிய நேரம் ஒதுக்கும்படி கேட்டுக்கொண்டு பொருட்களை எடுத்துச்செல்ல வேண்டும்.

21. பொருட்கள் ஏலத்தில் / ஒப்பந்தப்புள்ளியில் ஒப்புக்கொண்ட பின்னர் ஏலதாரர்கள் / ஒப்பந்ததாரர்களின் பொறுப்பிற்குரியது.

22. குறிப்பிட்ட கால கெடுவுக்கு பின்னர் தாமதமாக செலுத்தப்படும் தொகைக்கு பொருட்களின் மதிப்பிற்கு 24% வட்டியுடன் மேலும் 5 நாட்களுக்கு மட்டும் அனுமதிக்கப்படும். இந்நாட்களுக்குப்பின்னர் காலக்கெடு நீட்டிக்கப்படமாட்டாது. இந்நாட்களுக்கு பின்னரும் பணம் செலுத்தி பொருட்கள் எடுத்து செல்லவில்லை எனில் பிணை வைப்புத்தொகை மறுக்கப்படும். குறிப்பிட்ட காலக்கெடுவுக்கு பின்னர் மேலாண் இயக்குநர் அல்லது ஏலக்குழு நீட்டித்து வழங்கும் காலத்திற்கு பொருட்களின் விற்பனை மதிப்பின் 1% நாள் ஒன்றுக்கு தரை வாடகையாக வசூல் செய்யப்படும். நீட்டிக்கப்படும் காலக்கெடுவுக்கு பின்னர் மேலாண் இயக்குநர் அல்லது ஏலக்குழுவினரால் அவை மீண்டும் ஏலத்தில் விடப்படும்.

23. அபராத வட்டி மற்றும் தரை வாடகை ஆகியவற்றிற்கு அதற்குரிய (GST) சரக்கு மற்றும் சேவை வரி 18% நடைமுறையில் உள்ளவாறு வசூலிக்கப்படும்.

24. ஏலத்தில் / ஒப்பந்தப்புள்ளியில் ஒப்புதல் அளிப்பதற்கு முன்பு எந்த காரணமுமின்றி அட்டவணையில் குறிப்பிட்ட பொருட்களை / தொகுப்புகளை நீக்க கழகத்திற்கு முழு அதிகாரம் உண்டு.

25 எந்த காரணத்திற்காகவும் தொகுப்புகளையோ, பொருட்களையோ, வரைமுறைகளையோ, மாற்றியமைக்கவோ, ரத்து செய்யவோ, மேலாண் இயக்குநருக்கு அல்லது அவரால் நியமிக்கப்பட்ட ஏலக் குழுவுக்கு முழு அதிகாரம் உண்டு.

26. ஏலம் குறித்து பிரச்சனை ஏதும் ஏற்படின், அது விழுப்புரம் அதிகார எல்லைக்குட்பட்டது.

மேலாண் இயக்குநர்

**TAMILNADU STATE TRANSPORT CORPORATION (VPM) LTD,**
**(Govt. of Tamil Nadu Undertaking)**
**3/137, Salamedu, Post Box No.56,**
**VILLUPURAM 605 602.**

## TENDER CUM PUBLIC AUCTION

Tender cum Public Auction will be held for the disposal of Condemned Buses and other vehicles, Empty Barrels, Condemned Tyres, Tubes, Flaps, Scrap Spares, Iron Scraps, Waste Papers, Tyre Buffing Dust and Waste Oil etc.., from our Villupuram Region at Body Building Unit, Panruti, Vellore Region at Rangapuram, Vellore-9 and Kanchipuram Region at Orikkai - Workshop, Kanchipuram

**Condemned Scrap materials & Vehicles**

| Dates for Tender cum Public Auction to be held at our Body Building Unit - Panruti (for Villupuram), Rangapuram - Vellore and Orikkai Workshop – Kanchipuram. | | |
|---|---|---|
| Villupuram | Vellore | Kanchipuram |
| 19/07/2022 | 21/07/2022 | 23/07/2022 |
| 16/08/2022 | 18/08/2022 | 20/08/2022 |
| 20/09/2022 | 22/09/2022 | 24/09/2022 |

The detailed list of condemned Vehicles and other Scrap items together with terms and conditions of Tender Schedule can be obtained from Deputy Manager (Accounts), TNSTC (VPM) Ltd, Villupuram, Deputy Manager (Accounts), TNSTC (VPM) Ltd, Vellore and Deputy Manager (Accounts), TNSTC (VPM) Ltd, Kanchipuram respectively in person on payment of Rs.60/- (including Tax) by Cash on five working days in advance of the above auction dates and the above items can be inspected during the Office hours on the above said five days.

If the Tender documents are required through post, the Tenderer should clearly indicate the following:-

1. Name of the items. 2. Complete mailing address. In that case, it is requested to send an additional amount of Rs.50/- (Rupees Fifty only) towards postal charges. For any postal delay, the Corporation will not be responsible.

…2

The Sealed Tenders along with the requisite EMD will be received upto 17.00 Hrs. on the previous working day of Auction by Assistant Manager (Stores), TNSTC (VPM) Ltd, Villupuram Assistant Manager (Stores), TNSTC (VPM) Ltd, Rangapuram, Vellore and Assistant Manager (Stores), TNSTC (VPM) Ltd, Kanchipuram respectively.

For the same items Public Auction will be conducted on the above mentioned dates at 11.00 Hours at Body Building Unit - Panruti for Villupuram Region, at Regional Office, Rangapuram - Vellore for Vellore Region and at Workshop, Orikkai - Kanchipuram for Kanchipuram Region. Highest offer received either in the Tender or in the Public Auction will be consider for acceptance. The Managing Director reserves the right to reject any offer without assigning any reasons.

Managing Director